முரசொலி பாசறை

மதுரை 25.05.2023

‘செயல்... அதுவே சிறந்த சொல்’ என்பார்கள். ஆழமான சிந்தனைக்குப் பின் வருவதே ஆற்றல்மிகு செயல். பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் சிந்தித்துச் செயல்படுத்தி, தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் அவர் உருவாக்கிச் சென்ற கட்டமைப்புகள் குறித்து வாரந்தோறும் இங்கு...



# இடம் பொருள் கலைஞர் 19










# செம்மொழிப் பூங்கா

## தமிழ் மணக்கும் நிலம்!

“நமது தமிழ்மொழி, ‘செம்மொழி’ என்பதற்கான அனைத்துத் தகுதிகளையும் நிரம்பவே பெற்றிருப்பதால், அதனைச் செம்மொழியென அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று, இன்று நேற்றல்ல, ஒரு நூற்றாண்டு காலத்துக்கு முன்பே குரலெழுப்பப் பட்டது.

அன்று எழுப்பப்பட்ட அந்தக் குரல், ‘தமிழ்க் குரல்’, மெல்ல மெல்ல... ஆனால், உறுதியாக காலப்போக்கில், தமிழறிஞர்களின் குரலாக, தமிழ் ஆர்வலர்களின் குரலாக, தமிழ் சமுதாயத்தின் குரலாக, அரசியலரங்கத்தில் ஆற்றல் செறிந்த குரலாக உருப்பெற்று, அந்தக் குரலை, கேளாக் காதானவர்கள் மதித்திடத் தவறிவிட்டாலும், செவித்திறனும், சீர்த்திப் பண்பும் உடையோர் அதனை மதித்துப் போற்றி, அந்தக் குரலின் மாண்பமைந்த நியாயத்தை உணர்ந்து, **‘தமிழ் செம்மொழியே’** என, இந்தியத் திருநாட்டளவில் அங்கீகாரம் பெறச் செய்து பிரகடனப்படுத்தப்பட்ட நாள் 2004 அக்டோபர் 12”.

இப்படி ‘செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்’ எனும் தனது நூலில் எழுதி, தமிழ் எப்படிச் செம்மொழியானது என்ற வரலாற்றை வரைந்திருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர். தமிழ், செம்மொழித் தகுதியை அடைந்ததற்கான அடையாளமாக **‘அண்ணா மேம்பாலம்’** அருகே அமைக்கப்பட்ட பூங்காவுக்கு **‘செம்மொழிப் பூங்கா’** என்று கலைஞரால் 2010-ஆம் ஆண்டு செப்டம்பர் 12-ஆம் தேதி பெயர் சூட்டப்பட்டது. கதீட்ரல் சாலையில் அமைந்திருக்கும் இந்தப் பூங்காதான், சென்னை மாநகரின் முதல் **‘தாவரவியல் பூங்கா’** என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆளுநர்கள் கைவிட்ட பூங்கா

1836-ஆம் ஆண்டு, அன்றைய மதராஸ் மாகாணத்தில் ‘தி அக்ரி ஹார்ட்டிகல்ச்சுரல் சொஸைட்டி ஆஃப் மெட்ராஸ்’ என்ற பெயரில் பூங்கா ஒன்று உருவாக்கப்பட்டது. இதற்கு அன்றைய ஆங்கிலேய ஆளுநர்தான் புரவலராக இருந்தார். அந்த காலத்தில் இந்தப் பூங்கா 22 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருந்தது.

மொரீஷியஸ் தீவுகளிலிருந்து கரும்பு கொண்டு வரப்பட்டு, அவற்றை இங்கே வளர்க்க முடியுமா என்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளுக்காக அன்றைய அரசு ஆயிரம் ரூபாய் நிதியுதவியும் அளித்தது. அந்த ஆய்வுகளின் அடிப்படையில்தான் ‘ஈ.ஐ.டி. பாரி’ என்ற நிறுவனம் இந்தியாவின் முதல் சர்க்கரை ஆலையை, தமிழ்நாட்டின் கடலூர் நெல்லிக்குப்பத்தில் 1842-ஆம் ஆண்டு தொடங்கியது.

> 2004-ஆம் ஆண்டில் தமிழுக்குச் செம்மொழித் தகுதி கிடைத்த பிறகு, ‘செம்மொழி மாநாடு’, ‘செம்மொழித் தமிழாய்வு நிறுவனம்’, ‘கலைஞர் செம்மொழி விருது’, ‘அடையாறு தொல்காப்பியப் பூங்கா’ என அடுத்தடுத்து பல விஷயங்கள் நடந்தேறின. கோவை செம்மொழி மாநாட்டின்போது, அந்த மாநாட்டின் நினைவாக அங்கு ஒரு ‘செம்மொழிப் பூங்கா’ உருவாக்கப்படும் என்று கலைஞர் அறிவித்திருந்தார். நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான அரசு அமைந்தவுடன், அதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலேயர் காலத்துக்குப் பிறகு, அந்தப் பூங்காவுக்கு அரசின் நிதியுதவி கிடைக்காமல் போக, பொருளாதார நெருக்கடியில் தவித்த அதனை, கிருஷ்ணா ராவ் என்ற பிரபல சமையல் கலைஞருக்கு 18 ஏக்கர் பகுதி உள்குத்தகைக்கு விடப்பட்டது.

இவர்தான் கர்நாடக மாநிலத்தின் ‘உடுப்பி பகுதி உணவு வகைகளை’ சென்னைக்கு அறிமுகப்படுத்தியவர். இவரேதான் ‘உட்லண்ட்ஸ் ட்ரைவ் இன்’ என்ற உணவு விடுதியையும் 1962-ஆம் ஆண்டு இந்தப் பூங்காவில் தொடங்கினார். ஒரு காலத்தில் சென்னையின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக அந்த ‘உட்லண்ட்ஸ் ஹோட்டல்’ இருந்தது.

### நெடிய சட்டப் போராட்டம்!

சென்னை மாநகரத்தின் இதயம் போன்ற பகுதியில் அண்ணா மேம்பாலத்தையொட்டி, அரசுக்குச் சொந்தமான 13 காணி 4 கிரவுண்ட் 1,262 சதுர அடி நிலம் ‘தோட்டக் கலைச் சங்கம்’ என்ற அமைப்பின் பெயரில் அ.தி.மு.க.வின் ‘தோட்டக்கலை’ வி.கிருஷ்ணமூர்த்தி என்பவரின் சுயலாப வேட்டைக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், அங்குள்ள மரங்கள் எல்லாம் கார் பார்க்கிங் வசதிக்காக வெட்டப்படுவதாகவும், உட்லண்ட்ஸ் ஹோட்டலை உள்குத்தகைக்கு விடும் முன்பு அந்தச் சங்கம் மாநில அரசிடம் முறையான அனுமதி பெறவில்லை என்றும் பல புகார்கள் வந்தபடியிருந்தன.

இந்நிலையில், 1989- ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்தபோது, அந்தப் புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு, விலைமதிப்பற்ற இந்த நிலத்தைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கில், சுற்றுச்சூழலுக்கு எவ்விதப் பாதிப்புமின்றி தோட்டக்கலையை வளர்த்து, தோட்டக்கலை தொடர்பான ஆராய்ச்சிகளை நடத்தி ஊக்குவித்திட, கழக அரசு நிலத்தை மீட்டது.

அதற்கு எதிராக கிருஷ்ணமூர்த்தி சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். 1989-ஆம் ஆண்டு தொடங்கிய அந்த வழக்கு, பல கட்ட விசாரணைகள், பல மேல்முறையீடுகளுக்குப் பிறகு, 2019-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டது. தி.மு.கழக அரசு, நிலத்தை மீட்டது சரிதான் என்று தீர்ப்பளித்தது.

இதற்கிடையே 2008-ஆம் ஆண்டு ஏப்ரல் 17-ஆம் தேதி, முன்னர் உட்லண்ட்ஸ் ஹோட்டல் அமைந்திருந்த இடத்தில் தாவரவியல் பூங்கா ஏற்படுத்தப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவித்தார் கலைஞர். தொடர்ந்து, 2009-ஆம் ஆண்டு முதல் பூங்கா வடிவமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

### மாநகரில் ஒரு கானகம்

சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் ரூ.8 கோடி மதிப்பில், 500க்கும் மேற்பட்ட தாவர வகைகளுடன், ஏற்கெனவே இருந்த 80 வகையான மரங்களுடன், இந்தப் பூங்கா அமைந்துள்ளது. தென்னிந்தியாவுக்கே புதிதான செங்குத்துத் தோட்டம், இந்தப் பூங்காவின் நுழைவுவாயிலாக அமைந்துள்ளது. சிங்கோனியம், பிலோடென்ரான், மணிபிளாண்ட், பெரணி உட்பட சுமார் 30 விதமான தாவரங்களைக் கொண்டு செங்குத்துத் தோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் இருபுறமும் கொரியாப் புல் தோட்டம் காணப்படுகிறது.

மல்லிகை, செண்பகம், பாரிஜாதம் போன்ற வாசனை மலர்களைத் தரும் தாவரங்கள் அடங்கிய **நறுமணத் தோட்டம்,** துளசி, வசம்பு, குப்பைமேனி உள்ளிட்ட தாவரங்கள் அடங்கிய **மூலிகைத் தோட்டம்,** குறைந்த உயரத்தில் போன்சாய் முறையில் வளர்க்கப்படும் மாம்பழம், மாதுளை, கொய்யா, நெல்லி மரங்களைக் கொண்ட **போன்சாய்த் தோட்டம்,** விதவிதமான மலர்களைக் கொண்ட செடிகள், பல்வேறு வகையான மூங்கில்கள் ஆகியவை இங்கு இடம்பெற்றுள்ளன.தவிர, சிறுவர்கள் விளையாட சிறுவர் பூங்கா, செயற்கை நீரோடைகள், உணவகம் என வார, வார இறுதி, விடுமுறை என எந்த நாளில் இங்கு வந்தாலும் அகம் மகிழ்ந்து புத்துணர்ச்சியுடன் வீடு திரும்ப, இது ஓர் அமைதிப் பூங்காவாக நிலைபெற்றிருக்கிறது.

2010-ஆம் ஆண்டு நவம்பர் 24- ஆம் தேதி இந்தப் பூங்காவைத் திறந்து வைத்தார் கலைஞர். ஆனால், திறந்து வைத்த பிறகுதான் அடித்தது ‘காழ்ப்புணர்ச்சி அரசியல் புயல்’. அரசியல் காழ்ப்புணர்வு காரணமாக, அடுத்து வந்த அ.தி.மு.க. அரசு, ‘செம்மொழிப் பூங்கா’ என்று பூங்காவின் வாயிலில் உள்ள பலகையில் உள்ள சொற்களைப் புற்களால் மறைத்தது. கலைஞரின் பெயர் கொண்ட கல்வெட்டையும் மறைத்து வைத்தார்கள்.

“கல்லணையில் கரிகாலன் கட்டினான் என்றா எழுதப்பட்டுள்ளது. ஆனால் வரலாறு அவன் பெயரைச் சொல்கிறதா இல்லையா? அதைப்போல எத்தனை ஆண்டுகள் ஆனாலும், நான்தான் அந்தப் பூங்காவைத் திறந்து வைத்தேன், தமிழுக்குச் செம்மொழி தகுதியைப் பெற்றுத் தந்தேன் என்பதை யாராலும் மறைக்க முடியாது” என்று அப்போது கலைஞர் சொன்னார். அதுதான் நிதர்சனமான உண்மை!

**...வலம் வருவோம்**

## அ.வெண்ணிலாவின் பயணம்!



தென் தமிழ்நாட்டின் உயிர்நாடியாக விளங்குகிறது ‘முல்லைப் பெரியாறு அணை’. அந்த அணையைப் பல இடையூறுகளுக்கு மத்தியில் தனது சொந்தப் பணத்தைச் செலவு செய்து அமைத்தவர், ‘கர்னல் ஜான் பென்னி குயிக்’. தென் மாவட்ட மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதுபோல, அவர் பிறந்த ஊரான ‘கேம்பர்ளி’ நகரத்தில் சிலை அமைத்தார் நமது முதலமைச்சர். லண்டன் வாழ் தமிழர்களுக்கு மட்டுமல்ல, தமிழர் தடம் தேடும் ஆய்வாளர்களுக்கு அந்த இடம் பெருமிதம் கொள்ள வைக்கும்.

சமீபத்தில் தமிழ்நாட்டில் இருந்து லண்டன் சென்றுள்ள எழுத்தாளர் அ.வெண்ணிலா, ஜான் பென்னி குயிக் நினைவிடம், பிரிட்டன் நூலகத்தில் முல்லை பெரியாறு அணைக்கட்டுத் திட்டத்தின் அசல் வரைபடம், திட்டத்தின் கணக்கீடுகள், பென்னியின் குறிப்புகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு பதிவிட்டுள்ளார். பணி ஓய்வுக்குப் பின்னர், 1896- ஆம் ஆண்டு லண்டன் திரும்பிய பென்னி குயிக், அங்கு சில காலம் கல்லூரியில் பணியாற்றி இருக்கிறார். அந்த வரலாற்றுத் தடத்தையும் தேடி அ.வெண்ணிலா பதிவு செய்துள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



நான் சற்றும் எதிர்பாராதவிதமாக எனக்கு ஆதி திராவிடர் நலத்துறை ஒதுக்கப் பட்டிருந்தது. மீஞ்சூர் ஒன்றியச் செயலாளராக இருந்த நான், ஒரே தேர்தலில் அமைச்சரானேன். கலைஞர் அவர்களே என்னை அவருடன் அமைச்சர் அறைக்கு அழைத்துச் சென்று, நாற்காலியில் அமரவைத்து, “பொறுப்பை உணர்ந்து நல்லா பணியாற்றணும்” என்று சொன்னார். அந்தக் கணத்தில் எடுக்கப்பட்ட இப்புகைப்படம் ‘எல்லோரும் இந்நாட்டு மன்னர்’ என்ற வாசகத்தை எனக்கு நினைவூட்டுகிறது.

**-க.சுந்தரம், ஆதி திராவிடர் நலத் துறை முன்னாள் அமைச்சர், பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம்.**



க.சுந்தரம்

### ஒரே தேர்தலில் அமைச்சர்!

1989-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தி.மு.கழகத்தின் எளிய தொண்டனாக பொன்னேரி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தேன்.


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தமிழ்ப் பாடத்துக்குப் பரிசு!

**1969-ஆம் ஆண்டு கலைஞரின் 46-வது பிறந்த நாள். பேரறிஞர் அண்ணா மறைவிலிருந்து மீளாமல் இருந்ததால், விமரிசையாகக் கொண்டாடப்படவில்லை. கட்சி சார்பற்ற முறையில் அமைக்கப்பட்டிருந்த ஒரு குழு, கலைஞரின் பிறந்த நாள் விழாவுக்கு ஏற்பாடு செய்தது. கலைஞர் பெயரால் அறக்கட்டளை உருவாக்க, 75 ஆயிரம் ரூபாய் அளித்தனர். அதைப்பெற்றுக் கொண்ட கலைஞர், அண்ணா பெயரால் அறக்கட்டளை அமைத்து, அந்தத் தொகையை, பள்ளி இறுதி வகுப்பில் தமிழ்ப் பாடத்தில் முதல் மதிப்பெண் எடுக்கும் மாணவர்களுக்குப் பரிசு வழங்க வைப்பு நிதியாக வழங்கினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 128




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.